விக்கப்பட்டுள்ளன. இந்தத் தகுதிகள் கூட இல்லாத வட்டங்கள் தான் மிகப் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்படுகின்றன. நான் குறிப்பிட்ட இந்தத் தகுதிகள் ஒரு வேளை உறுப்பினர் சொல்கின்ற அந்தப் பகுதிக்கு இல்லாமல் இருக்குமேயானால், அதைப் பின்தங்கிய பகுதியாகச் சேர்க்க இயலும், இல்லாவிட்டால் இயலாது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் கொடுத்த விளக்கம் தெளிவாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே ஒரு நாள் எனக்குச் சொன்ன சாத்தான் குளத்தில் விழமாட்டான், என்பதை எனக்கு விளக்கிச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விழ மாட்டான்; விழுந்தவன் அடிக்கடி எழுந்திருக்கிறான். (சிரிப்பு).

தீயணைக்கும் படையில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் குடியிருப்புகள்.

* 3189. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் தீயணைக்கும் படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்,

(ஆ) தமிழ்நாட்டில் தற்போதுள்ள 187 தீயணைப்பு நிலையங்களில் சுமார் 85 தீயணைப்பு நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்குடன் மத்திய அரசின் 9-வது நிதிக் குழுவுக்கு ரூ. 14.70 கோடி நிதியுதவி கேட்டு பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது. அந்த உதவி கிடைக்குமேயானால், குடியிருப்புகள் கட்டத் தேவை

யான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும். தற்போது, சென்னை நகரில் பணிபுரியும் தீயணைப்புப் பணியாளர்களுக்கு, வண்ணையம்பதி, சைதாப்பேட்டை, அசோக் நகர் ஆகிய தீயணைப்பு நிலைய வளாகங்களில், முறையே 30,18,24 என மொத்தம் 72 குடியிருப்புகளை, ரூ. 58.16 லட்சம் செலவில் கட்ட, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்தப் பணி, மாநில பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு அத்துறையின் நடவடிக்கையில் உள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புப் பணியில் பணிபுரியும் ஊழியர்கள் பெரும்பாலும், இன்றைக்கு நகரை ஒட்டியுள்ள கிராமங்களில் அல்லது நகரிலேயே சின்ன சின்ன குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான வசதியைச் செய்து கொடுக்க வேண்டியது, நம்முடைய அரசாங்கத்தினுடைய கடமை. ஆகவே, அதைக் கவனத்தில் கொண்டு, மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்த பின்பு, அவர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தை கொண்டு வருவதைக் காட்டிலும், நம்முடைய தமிழக அரசே, காவல் துறைக்கு வீடு கட்டும் திட்டத்தை எப்படி படிப்படியாக நிறைவேற்றுகிறோம் என்று சொல்கிறோமோ, அதேபோல், அவர்களுக்கும் வீடு கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பதாவது நிதிக் குழுவுக்கு ரூ. 14.70 கோடி உதவி கேட்டு, நாம் எழுதியிருக்கிறோம். பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கிடையிலேயே, இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டு, அவர்கள் அனுப்பாவிட்டால் நாங்கள் கட்டுகிறோம் என்றால், அவர்கள் அனுப்பாமலேயே இருந்து விடுவார்கள்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசே கொடுக்காமல், நாம் கட்ட ஆரம்பித்தால், அவர்கள் நிறுத்தி விடுவார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, அது வருவதற்கு முன்பாகவே, Part II ஸ்கீமில் சேர்த்து அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு அனுமதிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில நிதி ஆதாரத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

1990 மே 5)

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம், பெரிய நகரமாக ஆகி, அங்கே பல பகுதிகளில் தீயணைப்புப் படைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்குக் குடியிருப்பு இல்லாமல் பெருத்த துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். பல்வேறு பகுதிகளைச் சார்ந்த அரசு ஊழியர்கள் அல்லது மற்ற ஆசிரியர்கள் இன்னும் பல்வேறு பிரிவினருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு— காலனி போல் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு, 'ஹவுசிங்' இலாகாவினுடைய ஏராளமான நிலங்களை, அவர்கள் இந்த நகரத்தினுடைய ஓரங்களிலே வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு பகுதியை அமைத்து, இவர்களுக்கும் வீடுகளை உண்டாக்குவதற்கான இடத்தை, இந்த அரசு ஏற்பாடு செய்து, மத்திய அரசாங்கத்தை நிர்பந்தப்படுத்தி, பணம் பெற்று இவர்கள் அத்தனை பேருக்கும் வீடு அமைத்துக் கொடுப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புப் பணியில் ஈடுபடுகிறவர்கள் அவசரக் காலங்களில், உடனடியாகச் சென்று தீயை அணைக்க தீயணைப்பு அலுவலகம் இருக்கின்ற இடத்திற்கு அருகிலேயே வீடுகளில் வாழ வேண்டும்; அப்போதுதான் அவர்கள் உடனடியாக அந்தப் பணியிலே ஈடுபட முடியும் என்ற கருத்து அரசுக்கும் உண்டு. அந்த அளவிலேதான், ஏற்கெனவேபலஇடங்களில் நிலங்கள், தீயணைப்பு நிலையங்களுக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது; மேலும் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. 9-வது நிதிக்குழு, நாம் கோரிய தொகையை ஒதுக்குமேயானால், உடனடியாக அது ஆரம்பிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இங்கே எடுத்துக் கூறியதைப் போலவும், திரு. பழனிவேல் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியதைப் போலவும், மாநில அரசின் சார்பில் நமக்குள்ள நிதியாதாரங்களைக் கொண்டு, படிப்படியாக அந்தப் பணியை நிறைவேற்ற இயலும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் நாம் தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திலே முன்னுரிமை கொடுப்பதோடு, அந்தத் தீயணைப்பு நிலையங்களுக்கான பணியாளர்கள் பதவிகள் ஒவ்வொரு இடத்திலே இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக தீயை அணைக்கக் கூடியஇடங்களுக்குச் சென்று தீயை அணைக்க முடிவதில்லை. எனவே, அங்கு தக்க பணியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் போதுமான அல்லது தேவையான பணியாளர்கள் இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைக்குமேயானால், உடனடியாக அது கவனிக்கப் படும்.

9-10 மணி

திரு. கி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு, தற்போது வழங்கப்படக்கூடிய சீருடைகள் மிகவும் மோட்டா ரகமான உடைகளாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, காவல்துறைக்கு அளிப்பது போல் அவர்களுக்கும் டெரிக்காட்டன் போன்ற சீருடைகள் வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தீயணைக்கும் பணியிலே ஈடுபடுகின்றவர்களுக்கு எத்தகைய உடை இருக்கவேண்டும் என்று எண்ணிப்பார்த்துத்தான் அத்தகைய உடைகள் வழங்கப் படுகின்றன.

சொத்து வரி மாற்றி அமைத்தல்.

*7867. திரு ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப் பட்டுள்ள பல்வேறு பஞ்சாயத்துக்களில் சொத்து வரி மாற்றி அமைப்பது குறித்து கணக்கெடுப்பு நடத்த சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.